**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 121** **நாள்: 22.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வடங்கள் அகற்றுவது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.08.2019) நடைபெற்றது.**

= = =

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் தொலைக்காட்சி வடங்கள், தொலைபேசி வடங்கள், இணையதள வடங்கள், மற்றும் கண்ணாடி இழை வடங்களை முறைபடுத்துதல் மற்றும் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வடங்களை அகற்றுவது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.08.2019) ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களிலுள்ள அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களில் வார்டு வாரியாக சம்மந்தப்பட்ட உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்கள் நேரிடையாக சென்று களஆய்வு மேற்கொண்டு அப்பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள நிலத்திற்கு அடியில் செல்லும் வடங்கள் மற்றும் நிலத்திற்கு மேற்பரப்பில் செல்லும் வடங்களை கண்டறிந்து அவற்றின் மொத்த அளவை கணக்கிட்டு 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 26 நிறுவனங்கள் தொலைக்காட்சி வடம் மற்றும் கண்ணாடி இழை வடம் அமைக்க அரசு நிர்ணயித்த கட்டணத் தொகையினை செலுத்தி அனுமதி பெற்றுள்ளனர். இவற்றில் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் அனுமதி அளிக்கப்பட்ட நீளத்திற்கு மேல் வடங்கள் அமைத்திருப்பது கண்டறியப்பட்டால் அந்நிறுவனங்களுக்கு தடவாடகை செலுத்த உரிய கால அவகாசம் வழங்கப்படும் தவறும் பட்சத்தில் அனுமதிக்கப்பட்ட நீளத்திற்கு மேல் நிறுவப்பட்ட வடங்கள் அகற்றப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியிடம் உரிய அனுமதி பெறாமல் தொலைக்காட்சி வடம் மற்றும் கண்ணாடி இழை வடம் அமைக்கப்பட்டிருந்ததால் சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் உரிய அனுமதியினை பெற்று தடவாடகையினை செலுத்த வேண்டும். அவ்வாறு தடவாடகையினை செலுத்த தவறும் பட்சத்தில் அனைத்து வடங்களையும் அகற்ற வேண்டும் என ஆணையாளர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில், தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) திரு.பி.துரைசாமி, கண்காணிப்பு பொறியாளர் (மின்சாரம்) திருமதி ஆர்.விஜயலட்சுமி, கோட்டப் பொறியாளர்கள், உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**